Registered as a News Paper in Ceylon

விலை: சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்: 389

அன்டன்
அலுமினியம் லூவர்ஸ்,
ஸ்லொட்டட்
ஆங்கிள் அயன்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 வைகாசி 12 ரபீ:ஆகி 1 (26—5—71) புதன்கிழமை இதழ் 103

# 'சிண்டிகேற்' காங்கிரஸிலிருந்து சஞ்சீவிரெட்டி வெளியேற்றம்

## பிளவுக்குக்காரணமானவரே கட்சியிலிருந்து விலகினுர்

புதுடில்லி, மே. 25 "சிண்டிகேட்" காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. என். சஞ்சீவரெட்டி அக்கட்சியின் காரியக் கமிட்டியிலிருந்து விலகிவிட்டதாக அறிவித்திருக்கிருர்.

கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும் இனி எந்தக் கட்டத்திலும் கலந்து கொள்ள மாட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள் விவேகத்தைக் கவனிக்கிருர்கள் இல்லை. வேகமாக மாறிவரும் உலகத்துடன் சேர்ந்து முன்னேற மறுக்கிருர்கள் திருமதி காந்தியை எதிர்த்துக் கண்டித்துக் கொண்டிருப்பதால் பயன் ஏற்படப்போவதில்லை; என்று திரு சஞ்சீவ ரெட்டி தெரிவித்திருக்கிருர்.

திரு. சஞ்சீவரெட்டி நிஜலிங்கப்பா காங்கிரஸ் மிக முக்கிய தலைவர்களில் ஒருவர். காங்கிரஸ் கட்சியின் பிளவுக்கு இவர் சம்பந்தமாக எழுந்த பிரச்னை முக்கியமான தாகும். கடந்த ஜனதிபதித் தேர்தலின் போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சஞ்சீவரெட்டி போட்டியிட்டார். இவரை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு வி. வி. கிரி அமோக வெற்றியீட்டினுர். காங்கிரஸ் வேட்பாளரான திரு சஞ்சீவரெட்டியை ஆதரிக்காமல் திரு. கிரியை திருமதி இந்திரா காந்தி ஆதரித்ததால் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டது.

### உத்தரவாத விலக்குப் பெற்றனர்

குருநகர்-செவ்

யாழ்ப்பாணத்திலிருந்து இன்னவெங்காயம் மைசூர் பருப்பு ஆகியவற்றை ஏற்றிச் சென்ற லொறிஒன்றை வவனியா பொலிசார் வவனியா அனுராதபுரப் பாதையில் வைத்துத் தடுத்துநிறுத்தினர். இப்பொருட்கள் உத்தரவாத விலக்கு உடன் பொலிசாரால் விற்பனை செய்யப்பட்டது.

8 ம்திகதி

### விஸ்வமடுவுக்கு காணிக்கச்சேரி

குருநகர், செவ்

விஸ்வமடுவுடித்த வாலிபர் திட்டத்திற்கான காணிக்கச்சேரி அடுத்தமாதம் 8-ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது. இக்காணிக்கச்சேரி இன்று தொடக்கம் யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் நடைபெற்று வருகிறது.

## உயர் அதிகாரிகளும் இரவுவேலை செய்வார்கள்!

கோட்டை. செவ்

துறைமுகக்கட்டுத்தாபன உயர் அதிகாரிகள் இனி ஒழுங்கு முறையிலான இரவு வேலையைச் செய்வதுடன் தினவரவுக் கொப்பிகளில் கையெழுத்தும் இடவேண்டும். இவர்களுக்கு இந்த உத்தரவு விடப்பட்டிருப்பதாக துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

175க்கு மேற்பட்ட துறைமுகக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் மத்தியில் கூட்டுத்தாபனத் தலைவர் பேசுகையில் இப்படிச்சொன்னுர்.

துறைமுக வேலைகள் துரிதமாக நடைபெறவும், ஒரு சிலர் வேலையின்றி இருக்கும் நிலையை மாற்றவுமே இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக அவர் சொன்னுர்.

துறைமுக கூட்டுத்தாபன உயர் அதிகாரிகளுக்கு கடந்த காலத்தில் இரவு வேலை இருக்கவில்லையென்றும், அவர்கள் தினவரவுக் கொப்பிகளில் கையெழுத்திடும் வழக்கம் இருக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

## லோகசபையில் தி. மு. க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

புதுடில்லி மே 25

இந்திய மத்திய அரசாங்க அமைச்சர்களின் பெயர்கள் இந்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதை ஆட்சேபித்து லோகசபையில் திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தார்கள்.

இந்தப் பெயர்கள் இந்தியில் குறிக்கப்படுவதுநிற்கும் வரை தாங்கள்கேள்விநேரத்தில் வெளிநடப்பு செய்யப் போவதாக அந்தக்கட்சியின் ஆட்சிமன்றக் குழுத்தலைவர் திரு. கே. மனோகரன் கூறினுர். கேரளக் காங்கிரசைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் இதே பிரச்னையின் மீது தி. மு. க. உறுப்பினர்களுடன் வெளிநடப்புசெய்தனர்.

## கூட்டத்துக்குள் லொறி! 80 பேர் பலி

ஹைதராபாத், மே 25

ஆந்திரபிரதேசத்தில் கர்னூலுக்கும் ஹைதராபாத்துக்குமிடையிலுள்ள ஓர் இடத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கூட்டமொன்றில் லொறியொன்று புகுந்ததின் காரணமாக 80 பேர் பலியானுர்கள். ஏராளமானவர்கள் காயமடைந்தார்கள் 59 பேர் படுகாயத்துக்குள்ளானுர்கள்.

இந்தச்சம்பவம் குறித்து ஆந்திரபிரதேச முதல் அமைச்சர் திரு. பிரமானந்தரெட்டி பெரும் அதிர்ச்சி தெரிவித்திருக்கிருர்.

## மாணவர்களுக்கான ரயில் பிரயாண பருவச்சீட்டு

### தலைமை ஆசிரியர் ஊடாக விண்ணப்பம்

கோட்டை, செவ்.

ரயில்களில் பிரயாணம் செய்வதற்கான பருவச்சீட்டுகளை மாணவர்கள் இனித் தமது பாடசாலைத் தலைமை ஆசிரியர்களூடாக விண்ணப்பித்தே பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே பருவச்சீட்டுக்களுக்கு வந்த விண்ணப்பங்களை ரயில்வேப் பகுதி நிராகரித்துள்ளது. மாணவர்கள் புதிய விண்ணப்பங்களை தமது தலைமை ஆசிரியர் ஊடாக அனுப்பிவைக்கவேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு குழுக்கள்

கோட்டை, செவ்.

அனுராதபுர மாவட்டத்தில் கிராம பாதுகாப்பு குழுக்களை அனுராதபுர அரசாங்க அதிபர் அமைத்துள்ளார்.

இக்குழுக்கள் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பதில் [illegible] முள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக

## வெளிமாணவர்களுக்கும் இனி உள்ளே தங்க இடம்

### மக்கள் வங்கி உதவி நிறுத்தப்பட்டது

கோட்டை, செவ்

மக்கள் வங்கி மாணவர்களுக்கு வழங்கி வந்த உதவிப்பணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், தமது சொந்தப் பணத்திலேயே கட்டணத்தைச் செலுத்திய பின்னரே பல்கலைக்கழக விடுதிகளில் தங்க மாணவர்கள் அனுமதிக்கப்படுவரர்கள் என்றும் பேராதனை இலங்கை பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

[illegible] படித்து வந்த மாணவர்கள் இனி அப்படித் தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான விடுதிகளிலேயே தங்க வேண்டும். இதற்கான முழுக் கட்டணங்களைச் செலுத்திப் பல்கலைக்கழக விடுதிகளில் சேர்ந்து கொள்ளலாம் இருவிடுதிகள் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பேராதனை-இலங்கை பல்கலைக்கழகம் விசேஷ அறிவித்தலொன்றில் தெரிவித்துள்ளது.

மாணவர்கள் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குவது தொடர்பான சகல கட்டணங்களையும் இலங்கை வங்கியிலோ அன்றி மக்கள் வங்கியிலோ கட்டி அதற்கான பத்திரத்தைப் பெற்று ஜூன் 1-ம் திகதி பல்கலைக்கழக மண்டபப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

CY 2000 தொடரிலக்க சவர்லெற் லொறி நல்ல நிலையில் விற்பனை குண்டு. மார்க்கண்டு (மாதிகாய்), 2-ம் ஒழுங்கை, பலாலி வீதி. யாழ்ப்பாணம். 2487

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நல்ல சுற்றுடலில் மூன்று பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் மேல் வீடு கீழ் வீடு வளவு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 40, இரண்டாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். 3131

TO LET

From August 1971, my house & property with garden produce at "Old Castle", Kopay House is fitted with electricity, water service and drainage Apply: C A W Edward, 67/1A Gregorys Road, Colombo 7 2485


## வட இலங்கைச் சங்கீத சபை

### அறிவித்தல்

1971 ஆம் ஆண்டுப் பரீட்சைகள்

மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதி 31-5-1971ல் இருந்து 14-6-1971 வரை பின்போடப்பட்டுள்ளது. பிந்திய விண்ணப்பங்கள் 21-6-1971 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

டபிள்யூ டீ. சீ. மகாதந்திலா
வ. இ. ச. சபைத் தலைவரும் வடமாநில வித்தியாதிபதியும்
கல்வித்திணைக்களம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 25-5-1971
2809

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## கேள்வி விளம்பரம்

1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி காலை 10 மணிவரை கீழ்க்காணும் வேலைகளுக்கு கட்டைவேலி கிராமச் சபைத் தலைவரால் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 28 5-71 மாலை 3 மணிவரை வழங்கப்படும். மேலும் விபரங்களை கி. ச. தலைவரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்

1. இன்பருட்டி கிணற்றும்பான் ரோட்டு வேலை
2. காங்கேசன் ஒளா இன்பருட்டி ரோட்டு வேலை
3. மித்திரன் அம்மன் கோவில் ரோட்டு வேலை
4. கட்டுக்கம்பரை வீதி வேலை
5. நித்தாவத்தை அரசடி வீதி வேலை
6. உச்சிக்குளம் கிணற்று வேலை.

சி. மாணிக்கம்
தலைவர்
கட்டைவேலி கிராமச்சபை
2807

## யாழ். அரசாங்க அதிபருக்கு இ. மு. ச. பாராட்டு

மாவிட்டபுரம், செவ்.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளால் வடபகுதியில் ஏற்பட்ட உணவு மற்றும் அத்தியாவசிய பொருள் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு உரிய நேரத்தில் பொதுமக்களுக்குப் பொருள்கள் கிடைப்பதற்கு உதவிய யாழ் அரசாங்க அதிபரைப் பாராட்டி பழை விளான் சாமக் கிராம முன்னேற்றச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் நேற்றுநடைபெற்ற போது நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில், போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்த சமயம் உடன் நடவடிக்கை எடுத்து மண்ணெண்ணெய் பெற்றோல் ஆகிய எரிபொருட்களையும், சீனி, மா, உணவுப் பொருள்களையும் கொழும்பிலிருந்து பெற்று யாழ் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா பொதுமக்களுக்குத் தட்டுப்பாடின்றி வழங்கினர் என தெரிவிக்கப்பட்டது.

வலி வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எஸ் பற்றிலைப் பாராட்டும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## யுனைட்டெட் கழகம் சாம்பியன்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

அல்வாய் திலகம் விளையாட்டுக்கழக கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதி ஆட்டம் திலகம் விளையாட்டுக்கழக மைதானத்தில் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றது.

அல்வாய் யுனைட்டெட் கழகத்திற்கும் வதிரி பொம்மோஸ் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற இப்போட்டியில் அல்வாய் கழகம் வெற்றிபெற்றது.

வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி தம்பிமுத்து பரிசில்கள் வழங்கினார். இச்சுற்றுப் போட்டியில் 18 கழகங்கள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது.

## வரணிவெற்றி

அம்பன், செவ்வாய்

வரணி நெல்லியடியின் விளையாட்டுக் கழகத்திற்கும் அம்பன் கலைவாணி விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சரமந்தா கூடப் போட்டியில் வரணி நெல்லியடியின் விளையாட்டுக்கழகம் 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

## கேதீச்சரத்தில் பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், புதன்

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சித்திரைமாதம் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கும், கௌரி அம்பாளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபனம் நடைபெறவிருக்கிறது.

3-ம் திகதி வியாழன்மாலை தொடக்கம் கிரியைகள் ஆரம்பித்து 6ம் திகதி காலை ஆசாரியபூசை, யாகபூசை, ஹோமம், தீபாராதனை, யாத்திரா தானம், மற்றும் கிரியைகள் நடைபெற்று பாலஸ்தாபன கும்பாபிஷேகம், விசேஷபூசை, ஆசீர்வாதம் முதலியன நடைபெறும்.

## பரிசு பெற்றனர்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்லை விக்னேஸ்வர சனசமூக நிலையத்தின் சார்பில் நடைபெற்ற கட்டுரை, கதைப் போட்டிகளில் ம. ஆ. அதிருபலிங்கம், ந. பத்மநாதன், ந. நகுலேசமணி ஆகியோர் கட்டுரைப் போட்டியிலும், வ. ஆ. தம்பையா வேலாயுதம், செல்வி இ. ஜெயலட்சுமி, ந. நகுலேசமணி ஆகியோர் சிறுகதைப் போட்டியிலும் பரிசுபெற்றனர்.

## புது நிர்வாகிகள்

அம்பன், செவ்வாய்

அம்பன் சாந்திசேவாக் கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டம் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. வேலாயுதம் உபதலைவர்: வி. கே. வேலாயுதம்பிள்ளை செயலாளர்: சி. செல்லத்துரை பொருளாளர்: வ. பராசசிங்கம். 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புயலுக்குப் பலி

மன்னார், செவ்வாய்

பெரும் புயல்காற்றில் சிக்கிய இரண்டு மீன்பிடிப் படகு கடலில் மூழ்கியது. இதில் பிரயாணம் செய்தவர்களில் மூவர் உயிர்தப்பி இலங்கைக் கரைக்குக் கொண்டுவரப்பட்டு மன்னார் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவர்களுடன் கூடச் சென்ற மற்றும் இருவர் பற்றி இராமேஸ்வரத்தில் தகவல் கோரப்பட்டுள்ளது.

## சிரமதான மூலம் வீதி சீரமைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

ஏழாலை வடக்கு கலைநிதி சனசமூகநிலையத்தலைவர் ஏ. தவப்பிரகாசம் தலைமையில் ஏழாலையில் உள்ள மூன்றாவது நீளமுள்ள வீதியை சிரமதானம் மூலம் செப்பனிட்டனர்.

இதேபோல மற்றும் வீதிகளையும் சிரமதானம் மூலம் சீரமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை கொலை வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. வின்சென்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று பத்தாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00
சிவாஜி கணேசனுடன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 200 மணி
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்கராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2 00
நீதிக்குப் பின் பாசம்

ஸ்ரீதேவி
காலை 10, பி.ப.2-00 மணி
அன்பே வா

லிடோ
காலை 10, பி.ப.2-00 மணி
நேர் வழி

பிளாசா
காலை 10, பி.ப.2-00 மணி
குழந்தையும் தெய்வமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(வர்ணச் சித்திரம்)

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 10-30, 4-30
பாரிஸ் ஐ லவ் யூ
(வயது வந்தவர்களுக்கு)
PARIS I LOVE YOU
(Adults Only)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை 10 3 . பி. ப. 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த
நேர் வழி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி.ப.1-30
எம்.ஜி.ஆர்- கே. ஆர். விஜயா நடித்த
தாழம்பூ

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m., 4-30p m
The Shadows Peggy Mount
in
FINDERS KEEPERS
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர்-கே ஆர். விஜயா நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்

RAJAH — Jaffna
Daily 10-30 a m 1-30 & 4-00 p m
Dirk Bogarade
Susannah York
in
SEBASTIAN
(Color)

REGAL (Jaffna)
Daily 10-30 a m 1-30 & 4-00 p. m.
Antony Quinn
in
THE 25 th HOUR
(Spy-film)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வின்ஸர்-யாழ்ப்பாணம்
காலை 10-30 பி. ப. 2-00
சிவாஜி கணேசன் ★ பத்மினி, ★ ஜெயலலிதா
★ நம்பியார் ★ சுந்தரராஜன் ★ தங்கவேலு ★ மனோரமா
நடித்த
குருதட்சணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லரசுகள் வாளாவிருந்தால்

# 'இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதி குலைந்து போகும்'

## பாரதப்பிரதமர் எச்சரிக்கிறார்

### அகதிகள் பிரச்னைக்கு முடிவுகாண கோரிக்கை

புதுடில்லி, மே 25

'இந்தியத் துணைக்கண்டத்தின் அமைதிக்கு வல்லரசு நாடுகள் தமது செலவாக்கைப் பயன்படுத்தி வழிசெய்யவேண்டும். இல்லையெனுல் எமது நாட்டின் பாதுகாப்புக்கான அவசிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்' என்று இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குள் பாகிஸ்தான் அகதிகள் வந்து குவிந்துகொண்டிருக்கும் நிலைமை குறித்து பிரதம மந்திரி திருமதி காந்தி லோகசபையில் உரை நிகழ்த்தினுர்.

பாகிஸ்தான் தனது உள்நாட்டு விவகாரம் என்று சொல்லிக்கொள்ளும் பிரச்னை இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையாகவும் மாறிக்கொண்டிருக்கிறது. எமது மண்ணில் எமது செலவில் அவர்களின் உள்நாட்டுப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்வதற்கு நாம் அனுமதிக்கமுடியாது என்று திருமதி காந்தி கூறினுர்.

தினமும் ஆயிரக்கணக்கில் அகதிகள் பாரதத்துக்குள் வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் இவர்கள் இப்படி வந்து சேர்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் இந்தியாவுக்குள் வந்துள்ளவர்கள் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். அவர்கள் பாதுகாப்புடன் திரும்பமுடியும் என்ற உறுதியிருக்கவேண்டும்; இங்கு வந்துள்ள லட்சக்கணக்கானவர்களையும் வைத்துக்கொண்டு உணவு, உடை, மருந்துச் செலவுகளைக் கவனிப்பது சுலபமான காரியமல்ல. இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்கவேண்டும். இல்லையென்ருல் துணைக்கண்டத்தில் அமைதியை எதிர்பார்க்கமுடியாது என்ருர் திருமதி காந்தி.

இந்தப் பிரச்னையை உலகம் கவனிக்காமல்போனுல் பாரதம் தனது பந்தோபஸ்தையும் மேம்பாட்டையும் கருதி நடவடிக்கைகளை எடுக்க நேரும். பாரதம் அமைதியையே விரும்புகிறது. எவரையும் பயமுறுத்தும்நோக்கமும் எமக்குக் கிடையாது என்ருர் திருமதி காந்தி தொடர்ந்து கூறியதாவது;

இந்திய மக்கள் மேலும் பல சுமைகளைத் தாங்கும்படி அழைக்கப்படலாம். அதற்கு அவர்கள் தயாராகவே இருக்கிருர்கள். பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகளில் முஸ்லிம்கள் மட்டுமல்ல. இந்துக்கள் முஸ்லிம்கள், பௌத்தர்கள் கிறிஸ்தவர்கள் என்று பல சமயத்தவர்களும் இருக்கிருர்கள் இது எமக்கு எதிர்பாராத ஓர் சுமை. பாகிஸ்தான் உள்விவகாரங்களில் நாம் தலையிட விரும்பவில்லை ஆனுல் பாகிஸ்தானியர் இந்தக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கவில்லை அவர்களின் உள்விவகாரம் எமது உள்விவகாரமாக மாறியிருக்கின்றது எனவே இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தாகவேண்டும் அவர்களின் பிரச்னைக்கு பாரதத்தின் செலவில் பாரத மண்ணில் தீர்வுகாண்பதற்கு அனுமதிக்கமுடியாது. இந்தப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் வல்லரசுநாடுகளுக்கு பொறுப்பு உண்டு அவர்கள் தம் ஆதிக்கத்தைசரியான முறையில் பாவிக்காது போனுல் துணைக்கண்டத்தில் அமைதி பேறபட முடியாது இந்த அகதிகள் விஷயத்தை உலகம் கவனிக்காமலிருப்பது ஏமாற்றமளிப்பதாக விருக்கின்றது

## மிக விரைவில் 'சிவில்' ஆட்சி

— யாஹ்யாகான்

தெய்வாதீனமாக தலைமறைந்த அவாமிலீக் உறுப்பினர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்போவதாக ஜெனரல் யாஹ்யாக்கான் அறிவித்திருக்கிருர் வேண்டுமென்றே கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு மன்னிப்பு எதுவும் கிடையாது ஆனுல் தவருக வழிநடத்தப்பட்ட கிழக்குப் பாகிஸ்தானியர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்று யாஹ்யாக்கான் தெரிவித்துள்ளார்

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசிய ஜெனரல் யாஹ்யாக்கான் கிழக்குப் பாகிஸ்தானில் அமைதி ஏற்பட்டவுடன் அங்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களின் கையில் ஆட்சியை ஒப்புவித்துவிடப்போவதாகக் கூறினுர்

தேசிய சட்டசபைக்குத் தெரிவான அவாமிலீக் அங்கத்தவர்களின் தனிப்பட்ட தன்மைகள்பற்றி ஆராயப்படுவதாகவும் அவர் கூறினுர் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்களின் உறுப்பினர் உரிமை பறிக்கப்படும் மற்றும் தவருக வழிநடத்தப்

பட்டவர்கள் என்று கருதப்படுபவர்கள் மாத்திரமே அங்கத்தவர்களாக அனுமதிக்கப்படுவார்கள் என்றும் ஜெனரல் யாஹ்யாக்கானின் கூற்றிலிருந்து தெரியவருகிறது

இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து சென்றுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளைத் திரும்பி வரும்படி ஜெனரல் யாஹ்யாக்கான் மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிருர் அகதிகள் பிரச்னையை இந்தியா வெறும் பிரச்சார நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்

### புரட்சியை ஏற்றுமதி செய்யவில்லை

மாஸ்கோ, மே. 25

'புரட்சியை ஏற்றுமதி' செய்வதில் சோவியத் யூனியனுக்கு அக்கறையில்லை இதை சோவியத் சரித்திரம் ஊர்ஜிதம் செய்கிறது என்று 'சர்வதேச விவகாரம்' என்ற மாஸ்கோ சஞ்சிகை கூறுகிறது.

அயல் நாடுகளிலுள்ள சோவியத் ராஜதந்திரிகளுக்கு சோவியத் அயல்நாட்டு மந்திரி 1920 செப்டம்பர் 10ந் திகதி அனுப்பிய சுற்று நிருபம் உழைப்பாளி மக்களின் புரட்சி இயக்கம் அந்தந்த நாட்டு உழைப்பாளி மக்களின் விஷயமும் கடமையுமாகும். கம்யூனிஸத்தை மேலிருந்து திணிக்க முடியாது, என்று கட்டிக் காட்டியிருப்பதை சஞ்சிகை மேற்கோள் காட்டியுள்ளது.

### பக்திப்பாடல்கள்

அளிவாலை, செவ்

அகில உலகினையும் படைத்து அனைத்துயிர்க்கும் அருளமுதளிக்கும் ஆண்டவனை ஐம்புலன்களும் ஒடுங்கப்பட்டு வழிபாடு செய்ய உதவும் புனித இடமே ஆலயமாகும்.

சில ஆலயங்களில் மனத்தூய்மையைக் கெடுக்கும் வகையிலான பாடல்களை இன்று ஒலிபெருக்கிகளில் கேட்கமுடிகிறது. இவற்றுக்குப் பதிலாக நல்ல பக்திப் பாடல்களை ஒலிபரப்புவது தர்மமாகும்' என்று அளிவாலையில் நடைபெற்ற சமயக் கருத்தரங்கு ஒன்றில் பேசிய திரு எஸ். திருஞானசம்பந்தன் குறிப்பிட்டார்.

## எகிப்திய அதிபருக்கு திருமதி மெயர் பாராட்டு!

கோப்பன்கேஹன் மே, 25

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத்தமது ஆட்சியில் ஏற்பட்ட நெருக்கடிகளை திறமையோடும் துணிவோடும் சமாளித்துவிட்டார் என்று இஸ்ரேலிய பிரதமர் திருமதி கோல்டா மெயர் பாராட்டியிருக்கிருர்.

இந்த நிலைமையைப்பயன்படுத்தி திரு சதாத் இஸ்ரேலுடன் உண்மையான பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வரவேண்டும் என்றும் தேவையற்ற கோரிக்கைகளை விடுத்துக் கொண்டிருக்காமல் உண்மையான தீர்வுக்கு முயற்சிசெய்ய வேண்டும் என்றும் திருமதி மெயர் கூறினுர். இப்படிச் செய்வாராளுல் அதிபர் சதாத் சரித்திரத்தில் மாபெரும் தலைவர் என்று போற்றப்படுவார் என்றும் குறிப்பிட்டார். திருமதி மெயர் இப்பொழுது டென்மார்க்கில் பயணம் மேற்கொண்டிருக்கிருர்.

## லண்டன் மக்களைமகிழ்விக்கும் கூர்க்கா வாத்தியக்கோஷ்டி

லண்டன், மே. 25

வீரமும் அஞ்சா நெஞ்சமும் படைத்த கூர்க்கா போர் வீரர்கள் பற்றி அறியாதவர்கள் யாருமில்லை. யுத்த உபாயங்களில் கைதேர்ந்த இந்த கூர்க்கா வீரர்களிடம் ஆங்கிலேயருக்குப் பெரும் மதிப்புண்டு. பிரிட்டிஷ் இராணுவத்தில் இப்பொழுதும் ஒரு கூர்க்கா அணியொன்று இருக்கத்தான் செய்கிறது.

இந்த கூர்க்கா வீரர்களின் படையணியைச் சேர்ந்த பாண்டு வாத்தியக் கோஷ்டியினர் இப்பொழுது நிதி திரட்டும் இயக்கமொன்றை மேற்கொண்டு இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றனர், சமீபத்தில் இக்கோஷ்டியினர் லண்டன் நகரிலுள்ள சதுக்கத்தில் கூட்டுவாத்திய அணிவகுப்பொன்றை நடத்தினர். லண்டன் நகர மேயர் சேர். பீட்டர் ஸ்ரட் பிரசன்னமாயிருந்த இவ் வைபவத்தில் பெருந்தொகையான மக்கள் கூடி நின்று இக் கோஷ்டியினரின் இசைக்கு கைதட்டிமகிழ்ச்சி தெரிவித்தனர்.

நேபாளத்தில் கூர்க்கா நலவுரிமைத் திட்டங்களுக்கு 10 லட்சம் பவுண்களைத் திரட்ட இவர்கள் திட்டமிட்டிருக்கிருர்கள். இதுவரை 750,000 பவுண்கள் இந்நிதிக்குச் சேர்ந்துள்ளது.

சென்ற வாரம் லண்டனில் நடைபெற்ற ரோயல் வின்சர் விழாவிலும் கூர்க்கா வாத்தியக் கோஷ்டியினர் பங்குபற்றினர். அத்துடன் ஆரம்பத்தில் நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் படைவீரர்களின் வருடாந்த ராணுவ அணிவகுப்புக் கண்காட்சியிலும் இக் கோஷ்டியினர் கலந்து கொள்வார்கள்.

இந்த கூர்க்கா வைபவங்களில் ஒன்ருக அண்மையில் கிராமிய பொது விடுதி ஒன்று "கூர்க்கா" என மறு பெயரிடப்பட்டது. தென் இங்கிலாந்தைச் சேர்ந்த பக்கிங்ஹம்ஷயர் மாவட்டத்திலுள்ள இந்தப் பொது விடுதி "ரெட் லயன்" என முன்பு அழைக்கப்பட்டது. கூர்க்க போர்வீரர்களைக் கௌரவித்து மறுபெயரிடப்பட்ட இந்தப் பொது விடுதியின் சுவர்களை கூர்க்கா ராணுவ கேடயங்கள் விருதுகள் அலங்கரிக்கின்றன.

......

அம்பன், செவ்வாய்

பயங்கர வாதிகளினுல் பாதிக்கப்பட்டோருக்கான நிதிக்கு குடத்தனை தபாலகத்தைச் சேர்ந்த ஊழியர்களும் அம்பன் அரசினர் வைத்தியசாலை ஊழியர்களும் தமது இம்மாதச் சம்பளத்தில் ஒரு நாள் ஊதியத்தை வழங்கினர்.

......

### கி. பாக். அகதிகளுக்கு பிரி. உதவி

லண்டன், மே 25

கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளுக்கு 10 லட்சம் பவுண்களை உடனடியாகக் கொடுத்துதவ பிரிட்டன் ஆயத்தமாக இருப்பதாக பிரிட்டிஷ் வெளிவிவகார சாம்ராஜ்ய காரியாலயம் அறிவித்தது.

கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளுக்கு நிவாரணமளிக்கும் முறையில் மனிதாபிமான அடிப்படையில் உதவியளிக்குமாறு ஐ. நா. பொதுக்காரியதரிசி ஊதாண்ட் உலக நாடுகளுக்கும் உலக ஸ்தாபனங்களுக்கும் விடுத்த வேண்டுகோளின் பயனுக பிரிட்டன் இந்த உதவியை அளிக்க முன்வந்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அகதிகளுக்கான ஐ. நா. ஹைகமிஷனர் மற்றும் ஐ. நா. உதவி ஸ்தாபனங்கள் வாயிலாக இந்த உதவித்தொகை அளிக்கப்படவிருக்கிறது.

கூடாரங்கள், நடமாடும் ஆஸ்பத்திரிகள், போக்குவரத்து சாதனங்கள், சமையல் பாத்திரங்கள் போன்றன அகதிகளுக்கு உடன் தேவைப்படுவதாக ஊதாண்ட் மதிப்பீடு செய்திருக்கிருர்.

இது இவ்வாறிருக்க, பிரிட்டிஷ் வெளிவிவகார சாம்ராஜ்ய மந்திரி சேர். அலெக்டக்ளஸ் ஹியூம் மக்களசபையில் விடுத்த அறிக்கை ஒன்றில் கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு நிவாரணமளிக்கும் சர்வதேச முயற்சிகளில் பிரிட்டன் பிரதான பங்கு கொள்ள ஆயத்தமாக இருப்பதாகக் கூறினுர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காய உற்பத்தியில்

# ஒரு சில மாதங்களில் சுயதேவையை நிறைவேற்றலாம்

கோட்டை, செவ்.

1970-ல் இலங்கை ஏறத்தாழ 70,000 டன் பம்பாய் வெங்காயத்தை இறக்குமதி செய்தது இதன் பெறுமதி சுமார் 2 கோடி 70 லட்சம் ரூபாய் சுமார் 80 லட்சம் ரூபாய் பெறுமதியான 12,000 டன் சின்னவெங்காயமும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பம்பாய் வெங்காய சராசரி இறக்குமதி 70,000 தொன்னாக இருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் சின்னவெங்காய உற்பத்தி நிலைமைகளை யொட்டி அதன் இறக்குமதி அவ்வப்போது மாறியிருக்கின்றது பெரிய வெங்காயம் இங்கு உற்பத்தி செய்யப்படாமையால் அது முழுமையாகவே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

வெளிவர்த்தக அமைச்சு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பகிரங்க டெண்டர்கள் மூலம் உணவுக் கமிஷனரால் வெங்காயம் கொள்முதல் செய்யப்படுகின்றது இந்தியாக்கு வெளியிலிருந்தும் கேள்விகள் வந்தபோதிலும் இந்தியா குறைந்த விலைக்குத்தருவதால் அதுவே இதில் ஏகபோகமாக ஈடுபட்டுவந்தது இந்தவெங்காயங்களின் விலைகள் காலத்துக்குக்காலம் வருடத்துக்கு வருடம் மாறிவந்திருக்கின்றது பெப்ரவரியிலிருந்து மே வரைக்கும் இந்தியாவில் இந்தியா வெங்காய விலை குறையும்.

இலங்கைக்குவெங்காயஏற்றுமதி செய்யும்பொறுப்பை தேசிய விவசாய கூட்டுறவு சந்தைச் சம்மேளனத்திடம் கையளிப்பதென இந்திய வெளிவர்த்தக அமைச்சு முடிவுசெய்திருப்பதாக பம்பாயிலுள்ள நமது உணவுக் கமிஷனர்மார்ச் 19-ம் திகதி அறிவித்தார்.

டெண்டர் ஒன்றின் அடிப்படையில் இரண்டு சப்ளையாளர்களிடமிருந்து வாங்குவதற்கு உணவுக் கமிஷன் முடிவுசெய்தது. இந்த இறக்குமதிக்காக உணவுக்கமிஷன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி அவைகளை அனுப்புவதற்கு இந்திய அரசு முன்னரும் அனுமதிக்கவில்லை இந்திய அரசு அனுமதிக்குமானால் இன்றைய தினமே அவைகளை அனுப்பிவைக்கவும் சப்ளையர்கள் தயாராய் இருக்கின்றனர்.

இலங்கைக்கு மட்டும்வெங்காயம் ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு சம்மேளனத்திடம் அப்பொறுப்பு கொடுக்கப்பட்டிருப்பது பாரபட்சமான நடவடிக்கையென்று இலங்கை இந்தியாவிடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது ஆனால் இதற்கு நலையதில் எதுவும் இன்னமும் இடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது அறுவடைகாலமல்லவென்பதால் நாட்டில் சின்னவெங்காயத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வெங்காயம் எமது நாட்டில் முக்கிய உணவுப் பொருளாக விருப்பதால் எமது வெளிநாட்டு சப்ளையர்களிடமிருந்து பெரும் விலையில் அதனை வாங்க வேண்டும், என்ற நிர்ப்பந்தத்துக்கு இடம் கொடுக்கலாகாது.

அவர்கள் கேட்கும் அளவு தொகையை கொடுப்பதற்கு நமது வெளி செலாவணி நிலைமை இடம் தரவில்லை.

எனவே வெங்காயம்தொன் 350 ரூபாய் இந்தியவிலைக்கு கிடைத்தால் மட்டுமேவெளியிலிருந்து வெங்காயம்வாங்குவதென மந்திரிசபைமுடிவு செய்துள்ளது. இந்தவிலைக்கு வெளியில் வெங்காயம் கிடைக்காவிடில் நாம் உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டே சமாளிக்கவேண்டும்.

இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் யாவற்றையும் உள்நாட்டில் உற்பத்தி செய்யவேண்டும் என்பதே அரசின் கொள்கை. இந்தப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான சகலவித ஊக்கத்தையும் அரசாங்கம் அளிக்கும். இலங்கையில் வெங்காயம் சிறப்பாக விளைகிறது. எனவே ஒரு சில மாதங்களில் இதில் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதில் கஷ்டமிருக்கமுடியாது

# கடலிலிருந்து சுத்தமான குடிநீர்

லண்டன், மே 25

நமது பூமியின் பெரும் பங்கு நீரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. பூமியின் நிலப்பரப்பில் முக்கால் பங்கு சமுத்திரங்களால் சூழப்பட்டுள்ளன. இத்துடன் தினம் தினம் கிட்டத்தட்ட 5,600,000 லட்சம் கலன் நீர் நதிகளிலிருந்தும் ஆறுகளிலிருந்தும் சமுத்திரத்தில் சங்கமமாகி வருகின்றன. இதைவிட பல லட்சக்கணக்கான நீர் மலைகளிலிருந்து பாய்ந்து வந்து ஏரிகளையும் நீர்த் தேக்கங்களையும் நிரப்பிவிடுகின்றன.

இப்படி உலகம் முழுவதுமே நீரால் நிரம்பி வழிந்தபோதும் இன்றைய கைத்தொழில் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான அளவு நன்னீர் கிடையாமல் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதாவது நன்னீர்ப் பற்றாக்குறை இன்று உலகை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகத் தலைதூக்கியுள்ளது.

எனவே இன்றைய விவசாய கைத்தொழில் மற்றும் வீட்டு குடிநீர் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு உவர்ப்பு நீர் செறிந்துள்ள சமுத்திரங்களைப் பயன்படுத்த இன்றை விஞ்ஞானிகள் முன்வந்துள்ளனர்.

கடல் நீரில் 35 விகிதம் வெறும் உப்பாக இருப்பதால் அதனைக் குடிநீராகப் பாவிப்பதென்பது முடியாத காரியம். எனினும் இந்த உவர்ப்பு நீரில் உப்பை அகற்றிவிடுவது சாத்தியமானால் இப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவது சுலபம்.

## நீர் சுத்திகரிப்பு

உவர்ப்பான கடல் நீரைச் சுத்தமான குடிநீராக சுத்திகரிக்கும் முறை ஏதோ புதிதானதல்ல 19-ம் நூற்றாண்டிலேயே நீர் சுத்திகரிக்கும் பொறிகள் பொருத்திய கப்பல்களை பிரிட்டன் நிர்மாணித்தது. இதன் காரணமாக சமுத்திரங்களைச் சுற்றி வரும்பொழுது இக்கப்பல்கள் குடிநீரை எடுத்துச் செல்லும் பிரச்னை எழவில்லை.

ஒரு நூற்றாண்டு காலமாக பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கடல்நீரை நீரைச் சுத்திகரிக்கும்துறைகளில் அரிய ஆராய்ச்சிகளை நடத்திப் புரட்சிகரமான சுத்திகரிப்புப் பொறிகளை உலகிற்கு அளித்துள்ளனர். இன்று உலகமெங்கிலுமுள்ள உவர்நீர் சுத்திகரிப்பு ஆலைகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகையை நிர்மாணித்துக் கொடுத்த பெருமை பிரிட்டிஷ் பொறியியல் நிபுணர்களையே சாரும்.

உவர்நீரை இருவழிகளில் குடிநீராக்கலாம். முதலாவது உப்பிலிருந்து நீரைப் பிரித்தெடுப்பது; இரண்டாவது நீரிலிருந்து உப்பைப் பிரித்தெடுப்பது; முதலாவது முறையைத்தான் விஞ்ஞானிகள் இதுவரை கையாண்டுவந்திருக்கின்றனர். இம்முறை செலவு மிக்கது. ஒரு கிராம் நீரைக் கொதிக்கவைப்பதற்கு 600 கலரி வெப்பம் தேவைப்படுகிறதம், ஆனால் அதே அளவு நீரைப் பனிக்கட்டியாக உறையச் செய்வதற்கு ஆக 80 கலரி வெப்பம் மட்டுமே தேவை.

இதனைமூலமாகக்கொண்டு பிரிட்டனிலுள்ள விஞ்ஞானிகள் தற்போது இரண்டாவது முறையை மிக வெற்றிகரமாகக் கையாண்டு வருகின்றனர் உவர்நீரிலிருக்கும் குடிநீரை உறையச் செய்யும் சக்தியுடையது 'பூதேன்' எனப்படும் நீரகக் கரியவளை; இதனைக் கடல் நீரின்மேல் தூவியதும். அது நன்னீரை மட்டும் உறைவைச்செய்து, உப்பிலிருந்து பிரித்துவிடுகிறது. செலவு குறைந்த புரட்சிகரமான இம்முறையை அடிப்படை

(5-ம் பக்கம் பார்க்க)

# பொதுச்சேவைக்குக் கிடைத்த மதிப்பு



நல்லூர்க்கந்தன் உற்சவத்திற்குச் சென்றவர்கள் ஒவ்வொருவருக்கும் திருவாளர் ஆதிரத்தினத்தைத் தெரியும் சுவாமிகளைப் பின்தொடர்ந்து வரும் பஜனைகளில் 'ஓம் முருகா' என்றொரு குரல் தனித்துவமான ஜீவக்களையுடன் ஒலிக்கிறதே என்று கவனித்தால் அந்தக் குரலுக்குரியவர் தனித்துவத்துடனும் தெய்வ நம்பிக்கைப் பொலிவுடனும் ஆஜானுபாகுவாகக் கத்தும் பண்ணுமாகப் பாடிவருவதைக் கண்டிருக்கிறோமல்லவா? அவர் தான் திரு. ஆதிரத்தினம்.

திரு. ஆதிரத்தினத்தின் மற்றும் சமூக சேவைகளை நமது அரசு கணித்து அவருக்குச் சமாதான நீதவான் பட்டத்தை வழங்கியிருக்கிறது. இது என்றைக்கோ கிடைத்திருக்கவேண்டிய கௌரவம் இவ்வித கௌரவம் இப்போது கிடைத்திருப்பதும் ஒருவித நன்மைதான். பொறுப்பு மிக்க ஒரு சிறந்த குடும்பத் தலைவராயிருந்து பொறுப்புக்களிலிருந்து ஒய்வுபெற்றுக்கொண்டுள்ள இவர் 'முருகா' என்று 'ஈசிச்சேரில்' கிடந்து கொள்வதற்கு அரசு அளித்துள்ள இந்த ஜே. பி. பட்டம் பெரிதும் இடைஞ்சலாயிருந்தபோதிலும் சமூக சேவையில் மேன்மேலும் ஈடுபட இது இவரை ஊக்குவிக்கும் என்பதால் நாம் மகிழ்ச்சியடையலாம்.

குடத்துள்விளக்காயிருந்து இவர் ஆற்றிய சமூகப் பணிகள் ஏராளம். இவற்றில் தீண்டாமை ஒழிப்பு முயற்சியில் ஏற்றுக்கொண்ட பங்கு அளப்பரியது. நீதியரசராயிருந்த அமரராகிவிட்ட திரு. டபிள்யூ பதமநாதன். திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோருடன்சேர்ந்து திரு ஆதிரத்தினம் ஆலயப்பிரவேசத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். முதன்முதலில் நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவில் ஹரிஜனர் வழிபாட்டுக்குத் திறந்துவிடப்பட்டது. இதில் இவர் முக்கிய பங்கெடுத்தார்.

ஆலயப் பிரவேசமென்றதும் இன்னொரு சங்கதியும் நினைவுவருகிறது. இனத்தால் மதத்தால் மொழியால் நிறத்தால் வேறுபட்டவரையும் இவர் ஆலயப்பிரவேசத்திற்கு வழிசெய்து கொடுத்தார், அவர் யார் தெரியுமா? அவர்தான் சாந்தசாமி அடிகளார். அப்போது இலங்கையின் கவர்னர் ஜெனரலாக இருந்த சோல்பரிபிரபுவின் ஒரே செல்வப்புதல்வன் தான் இந்த சாந்தசாமி.

சோல்பரிப்பிரபு யாழ்ப்பாணத்திற்கு வந்து கிங்ஸ் ஹவுஸில் தங்கியிருந்தவேளை ஊர்பார்க்கப் புறப்பட்ட மகன் நல்லூருக்கும் வந்து திரு. ஆதிரத்தினத்தின் உத[illegible] [illegible] நேரத்திலும் முருகன் ஆலயம் [illegible] கப்பட்டுத் தரிசனம் செய்தார். அன்னார் யோகசுவாமிகளின் நற்சீடனாக கிழக்கு மாகாணத்தில் ஆன்மீகத் தொண்டாற்றிவருவது யாவருக்கும் தெரிந்ததே. குபேரனை சோல்பரிமகன் கீழைத் தேயப்பண்பாடு பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளவும் யோகசுவாமிகளின் சிஷ்யனாகி சாந்தசாமியெனப் பெயர்பெறவும் திரு. ஆதிரத்தினமே காரணஸ்தாவர் யோகசுவாமிகளிடம் சாந்தசாமியடிகளை இவர் அழைத்துச் சென்று காட்டிவைத்தார். அதன் பின்னர்தான் அவர் வாழ்வில் மாற்றமேற்படலாயிற்று. திரு. ஆதிரத்தினம் யோகசுவாமிகளிடம் மிக்க ஈடுபாடுடையவர்.

நல்லூர் மணியகாரரான திரு செல்லையாவின் மூத்த புதல்வனான திரு. ஆதிரத்தினம் அந்நாளில் சென் ஜோன்ஸ் கல்லூரியில் லண்டன் மற்றிக்குலேஷன்வரை பயின்று பின்னர் ஆசிரியப்பணியாற்றி அதன்பின் புகையிரதப் பகுதியில் உயர் உத்தியோகம் வகித்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் யாழ். கச்சேரி தேர்தல் காரியாலயத்திலும், இலங்கை போக்குவரத்து சபையிலும் உயர்ந்த பதவிகளை வகித்தவர். குடிசனப்புள்ளி விபரனாகாவிலும் கணக்காய்வுப்பகுதியிலும் மதிப்பு வாய்ந்த உத்தியோகங்களை திர்வகித்தவர். சாம்பமூர்த்தி அன்கம்பெனியில் உதவிக் கணக்காளராகவும் பணியாற்றியுள்ளார்.

இளமைக் காலந் தொட்டே சமூக சேவைகளில் இவர் பெரிதும் ஈடுபட்டார். பல பொதுஸ்தாபனங்களிலும் இவர் முக்கிய பதவிகளை வகித்தார். நன்பர்கள் சகாய உதவிச் சங்க உதவிச் செயலாளராயிருந்து வந்த இவர் தற்போது அதன் பதில் செயலாளராக யாழ் அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். இளைஞர் சாரண இயக்கத்திலும் யாழ். சமூகசேவைக் குழுவிலும் உறுப்பினராக விளங்கினார். யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை முதலுதவிப் பிரிவிலும் முக்கிய உத்தியோகஸ்தராக இருந்து தொண்டாற்றினார். காலஞ்சென்ற திரு. சண்முகதாச மாப்பாண முதலியார் நல்லைக்கந்தன் ஆலய நிர்வாகியாயிருந்தபோது ஆலயத் தொண்டர் படையினதும் பஜனைக் குழுவினதும் பொறுப்பாளராக இருந்த திரு. ஆதிரத்தினம், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தாவான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளை அந்நாளில் அழைத்து வந்து ஒவ்வொரு திருவெம்பாவைக் காலத்திலும் வீதி பஜனை செய்வித்தார்.

இப்போதும் பல பொது ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் இவர் பலவிதத்திலும் முடிந்த உதவிகளை வழங்கி வருகிறார்.

திரு. ஆதிரத்தினத்திற்கு அரசு அளித்த கௌரவம் அன்னார் ஆற்றிய ஆன்மீக மற்றும் பொது சேவைகளுக்கு அளித்த கௌரவமாகும்.

— நல்லையூரன்

## அறிவித்தல்

### சீமெந்து விநியோகம்

**யாழ்ப்பாண மாவட்டம்**

பாவனையாளர்களுக்குச் சீமெந்து விநியோகம் செய்வதற்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதியளவு சீமெந்து வழங்கப்பட்டு வருகிறது. சீமெந்து தேவைப்படுவோர் பிரிவுக் காரியாதிகாரியின்(D.R.O.)சிபாரிசுடன் அண்மையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தங்கள் தேவைகளைப் பெறுமாறு வேண்டப்படுகின்றனர். 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் இந்த ஒழுங்கு நடைமுறையிலிருக்கும்.

ஆனி முதலாம் திகதி தொடக்கம் 25 பைகளுக்கு மேல் தேவைப்படுவோர், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் கிடைக்கும் ஓர் விண்ணப்பப் பத்திரத்தில், காங்கேசனும் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக சீமெந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமெந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்ந்து 25 பைகள் வரை தேவைப்படுவோர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே தும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பம்: ஏ. பிரான்சிஸ்.
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
18-5-1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கைத்தொழில் ஆரம்பிக்க 114 பேர் விண்ணப்பித்தனர்

## தொழில் அமைப்பு முறைகள் பற்றி குழுத் தலைவர் விளக்கம்

— நமது நிருபர் 'யோகி' —

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில், தொழில்களை ஆரம்பிக்க 114 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். இவர்களின் விண்ணப்பங்களை கைத்தொழில் அபிவிருத்திக்குழு நேற்றுப் பரிசீலனைசெய்தது. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும், தனித்தனியே சென்று தாங்கள் ஆரம்பிக்கவிருக்கும் தொழில்பற்றி குழுவிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

யாழ் அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா தலைமையில் நேற்று நடைபெற்ற மகாநாட்டில் விண்ணப்பதாரர்களில் பெரும்பாலானோர் சமுகமளித்திருந்தனர்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக் குழுத் தலைவர் திரு சோமபால குணதீரா திரு மெல் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா ஆகியோர் குழுவில் அங்கம்வகித்தனர். வங்குக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசாவும், இம்மகாநாட்டில் கலந்துகொண்டார்.

மகாநாட்டில் குழுத்தலைவர் திரு சோமபால குணதீரா கூறியதாவது; "யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொருளாதார முன்னேற்றம் பற்றிக்கூடி ஆராய்வதற்கு இந்த மகாநாடு சந்தர்ப்பமளித்துள்ளது. இந்நாட்டில் கைத்தொழிலின் எதிர்காலத்தைப் பற்றி சந்தேகிப்பதற்கு இடமில்லை.

### நன்கு சிந்திக்க வேண்டும்

அச்சுவேலிக்கைத்தொழில் பேட்டையை தொடர்ந்து அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இப்பேட்டையில் தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோர் என்னவிதமான தொழில் ஆரம்பிக்கலாம் என்பதை நன்குசிந்தித்து முடிவுசெய்ய வேண்டும். அவசரப்பட்டுத் தவறான முடிவு எடுக்கக்கூடாது இதுபற்றி முடிவு செய்வதற்கு தாய போதியளவி நேரம் எடுக்கவேண்டியது அவசியம்.

விண்ணப்பதாரர்களுக்குப் போதிய நேரம் இல்லை என சிலர் கருதக்கூடும். இன்னும் ஒருமாதகாலம் தாமதித்து விண்ணப்பங்களை கோரியிருந்தால் கைத்தொழில் பேட்டை உருவாகவும் ஒருமாதகாலம் தாமதமாகலாம் இன்றுள்ள பொருளாதார பிரச்சினையை நோக்கும்போது ஒரு மாதகாலம் நீண்டகாலமாகும்.

### தனித்தும் இயங்கலாம்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் என்னென்ன கைத்தொழில்கள் ஆரம்பிக்கலாம்! இதைப்பற்றி நன்கு கவனம் செலுத்தவேண்டும். வீட்டோடு சிறு நெசவு நிலையம்வைத்து சாரங்களையும் வேட்டிகளையும் தயாரிப்பவர்கள் அச்சுவேலியில் தொழில் ஆரம்பிக்கவேண்டுமெனக் கருதினால் அது நல்லதல்ல பல விதத்திலும் அது அவருக்கு பாதகமாகத்தான் இருக்கும். வீட்டில் சிறு நெசவு நிலையம் வைத்திருப்பவர் வீட்டில் அவர் இல்லாத போது அவரின் மனைவியோ, பிள்ளைகளோ கவனிக்க வசதியாக இருக்கும். இந்த வசதி கைத்தொழில் பேட்டையில் பெறமுடியாது ஆதலால் கைத்தொழில் பேட்டை ஆரம்பித்தால் தனிப்பட்ட தொழில் நிலையங்கள் இருக்கக் கூடாதென்ற கருத்தல்ல. உலகில் எல்லா நாடுகளிலும் கைத்தொழில் பேட்டைகள் இருக்கும் அதே வேளையில் தனிப்பட்ட தொழிற் சாலைகளும் இருந்துவருகின்றன.

தனிப்பட்ட இடத்தில், சகல வசதிகளுடன் இருக்கும் தொழிற்சாலையை ஏன் கைத்தொழிற் பேட்டைக்கு கொண்டுசெல்ல வேண்டும். இதனால் எத்தனையோ வசதிக் குறைவுகள் ஏற்படலாம். தனிப்பட்ட கைத்தொழில்கள், கைத்தொழில்பேட்டைகளைப் போன்று முக்கியத்துவம் வாய்ந்தவைதான்.

### வாடகை செலுத்த வேண்டும்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தொழில் ஆரம்பிப்போர் வாடகை செலுத்தத் தேவையில்லை என்ற கருத்து சில சமயம் இருக்கக்கூடும். அது தவறான கருத்தாகும். கைத்தொழில் ஆரம்பிப்போர் வாடகை செலுத்த வேண்டும். ஒரு சதுர அடிக்கு 21 சத வாடகையாக ஒரு மாதம் செலுத்தவேண்டும். இதன்படி 1000 சதுர அடிக்கு மாதம் 210 ரூபா செலுத்த வேண்டிவரும். இங்குள்ளவர்கள் 4000 சதுர அடி கேட்டிருப்பதால் மாதம் சுமார் 840 ரூபா செலுத்தவேண்டிவரும். இங்கு விண்ணப்பம் செய்தவர்கள் இதனைக் கவனத்தில் வைத்துக்கொண்டு தங்கள் தொழிலுக்கு தேவையான சதுர அடிபற்றி முடிவு செய்ய வேண்டியது அவசியம்

அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கைக்கு அமையவே இப்பேட்டைகளில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். எவரும் தேசியகொள்கை எதிராக தொழிலாரம்பிக்க முயன்றால் அவர்களின் விண்ணப்பம், ஏற்றுக்கொள்ளப்படாதென்பதை மறந்து கூடாது.

நாட்டில் போதியளவு சாக்லட் உற்பத்தி நடைபெற்றுவருகிறது. மேலதிகமாக சாக்லட் இருந்து வருகிறது. இதற்காக ஏற்கனவே யந்திர சாதனங்களுக்கு ஏராளமான பணம் அந்நியசெலாவணி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தநிலையில் மீண்டும் ஒருவர் சாக்லட் உற்பத்திக்கு விண்ணப்பம் செய்வாரானால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### மை உற்பத்தி

மற்றொரு உதாரணம் மை உற்பத்தி. இக் கைத்தொழிலுக்குத் தேவையானவர்கள் இருவர் மட்டுமே. பீப்பாக்களில் வரும் மையைப் போத்தல்களில் அடைத்து மூடுவதற்கு இரண்டு பேருக்கு மட்டுமே அங்கு வேலை வழங்கப்படும். ஒருவர் பீப்பாவை திறப்பார். மற்றவர் மையை போத்தல்களில் ஊற்றி மூடுவார். இதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? போத்தலும் மூடியும் மட்டுமே இதற்குப் பயன்படும். சிலசமயம் மைப் பீப்பாக்கள் வரவில் தாமதம் ஏற்படுமானால் தொழிற்சாலை சிலகாலத்திற்குச் செயல்படாது. ஆதலால் எவரும் இப்படியான கைத்தொழில்களை ஆரம்பிக்க முற்பட்டால் அவர்களுக்கு கைத்தொழில் இடம் கிடைக்காதென்பதை தெரிவிக்கவிரும்புகிறேன்.

இந்நாடு என்றுமில்லாதவாறு இன்று அந்நியசெலாவணி நெருக்கடியில் இருக்கிறது ஒருவர் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தொழில் ஆரம்பிக்கவிருக்கும் அதேவேளையில் மற்றொருவர் வெளிநாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு தொழில் ஆரம்பிக்க முற்பட்டால் உள்ளூர் மூலப்பொருள் பற்றி சிந்திக்கவேண்டும். தாராளமாகக் கிடைக்கும் மூலப்பொருள்களைக்கொண்டு தொழிலை ஆரம்பிக்கவிருக்கும் அதேவேளையில் மற்றொருவர் வெளிநாட்டு மூலப் பொருட்களைக் கொண்டு தொழில் ஆரம்பிக்க முற்பட்டால் உள்ளூர் மூலப்பொருளுக்கே கைத்தொழில் பேட்டையில் இடம் கிடைக்கும். ஆகவே ஒரு தொழிலை ஆரம்பிக்குமுன் அதற்கான மூலப்பொருள்பற்றி சிந்திக்கவேண்டும். தாராளமாகக் கிடைக்கும் மூலப்பொருளைக்கொண்டு தொழிலை ஆரம்பித்தால் அது வளர்ச்சியுறும்.

### தொழிலை எவ்வாறு தெரிவுசெய்வது?

எக்கலையில் ஏற்கனவே கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது, காலியிலும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உள்ளது. மற்றும் பல பாகங்களிலும் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டரீதியாக கைத்தொழில்களை அபிவிருத்திசெய்வதே நோக்கமாகும். ஆதலால் அந்தப் பகுதியில் உள்ள மூலப்பொருட்களைப் பயன்படுத்திக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் ... [illegible] கண்டியில் ஒருவர் மரப்பொருள் கைத்தொழிலை ஆரம்பித்தால் அதனால் பல வசதிக்குறைவுகள் ஏற்படும். இங்கிருந்து மூலப்பொருட்களை கண்டிக்குக் கொண்டுசெல்ல வேண்டிய நிலை ஏற்படும். இதேபோல நுவரெலியாவில் மீன்பிடிக் கைத்தொழிலை ஆரம்பிக்க முடியாது. ஆதலால் கைத்தொழில்களைத் தெரிவு செய்யும்போது அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் வகையில் யாழ். குடாநாட்டில் மட்டும் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் வகையில் தெரிவு செய்யவேண்டும்.

இதுவரை இந்நாட்டில் ஆரம்பிக்கப்படாத புதிய தொழில் ஒன்றை இங்கு ஆரம்பிக்கலாமா எனச் சிலர் கேட்கலாம். வவுனியாவில் உள்ள மூலப்பொருட்களைக் கொண்டு அச்சுவேலியில் தொழில் ஆரம்பித்தால், வருங்காலத்தில் அதனால் ஏற்படும் பாதிப்புப்பற்றிச் சிந்திக்கவேண்டும் இன்று வவுனியாவில் அங்குள்ள மூலப் பொருட்களைக் கொண்டு தொழில் ஆரம்பிக்கப்படாவிட்டாலும், வருங்காலத்தில் அங்கு கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்படும் போது, அங்குள்ள மூலப் பொருட்களைக்கொண்டு அங்கு தொழில் ஆரம்பிக்கப்படலாம். அதன்பின் பாதிப்பு ஏற்படும் ஆதலால் அந்தப் பகுதியில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டு ஆரம்பிப்பது தான் நல்லது. மற்றப் பகுதியில் உள்ள மூலப்பொருட்களைக் கொண்டு இங்கு தொழில்கள் ஆரம்பிக்கக் கூடாதென்று எவரும் கருதக்கூடாது உங்களின் வசதிக்காகவே இதனைக் கூறினேன்.

இப்போது அனுப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரம் இறுதியானதல்ல. கைத்தொழிலில் உள்ள உங்கள் விருப்பத்தை தெரிவிக்கும் கடிதம் போன்றது தான் இவ்விண்ணப்பம். சில மாதங்கள் கழித்து மற்றொரு விண்ணப்பப்பத்திரத்தை நிரப்ப வேண்டும். அந்தப் பத்திரத்தில் முழுவிபரங்களையும் தெரிவிக்கலாம்.

# 'மண்ணெண்ணெ விநியோகம்: ப. நோ. ச. விடம் ஒப்படைக்கவும்'

மாவிட்டபுரம், செவ்

வடபகுதியில் மண்ணெண்ணெ விநியோகத்தை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வர்த்தக அமைச்சரை காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் இ. குமாரசாமி கோரியுள்ளார்.

வடக்கில் நிலவும் மண்ணெண்ணெ தட்டுப்பாடு குறித்தும் அதை நிவர்த்தி செய்யக்கூடிய வழிவகை பற்றியும் குறிப்பிட்டு வர்த்தக அமைச்சருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இவர் இவ்வாறு கேட்டுள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தக்கவாறு மண்ணெண்ணெ வழங்க வழி ஏற்படுத்தவேண்டுமென்றும் இதற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மண்ணெண்ணெய் இருப்பு வைக்கக்கூடிய வசதிசெய்யப்பட வேண்டுமென்றும் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மகஜரின் பிரதிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர், வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## ஏற்றுமதி அதிகரிக்கும்

கொழும்பு, செவ்

கைத்தொழில் அமைச்சினால் உள்ளூர் உற்பத்தியைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்கான திட்டமொன்று விரைவில் அமுலுக்குக்கொண்டுவரப்படவிருக்கிறது.

மேற்படி திட்டம் சர்வதேச நிறுவனங்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் படிப்படியாக உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி விஸ்தரிக்கப்படும் அதே வேளையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகளும் நாட்டின் கைத்தொழில்களுக்கு அளிக்கப்படுவது குறித்தும் ஆராய்ச்சி செய்யப்படும்.

### கடலிலிருந்து

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக்கொண்டு பிரமாண்டமான நீர் சுத்திகரிப்புப் பொறிகளை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இன்று அமைத்து வருகிறார்கள்.

### அணுசக்தி

அணுவின் அபாரசக்தி இன்று பௌதிகவியல் விஞ்ஞானத்தில் புதுமையான சாதனைகளைச் செய்துவருகிறது. அணுசக்தியால் இயங்கும் நீர் சுத்திகரிப்புப் பொறிகளை நிர்மாணிக்கும் சாத்தியக்கூறுகள் பற்றியும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். அணுசக்தியைக் கொண்டு மின்சாரம் உற்பத்திசெய்வது இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. கூடியவிரைவில் அணுசக்தியைப் பிரயோகித்துச் சமுத்திரங்களில் தேங்கியுள்ள உவர்ப்பு நீரைச் சுத்தமான குடிநீராக மாற்றுவது சாத்தியமாகுமென்பது திண்ணம்.


# கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

சகல பதிவுசெய்யப்பட்ட அச்சடிப்பாளர்களுக்கும்—

பாங்க் மற்றும் பொண்ட்ஸ் கடதாசி, உடனடியாக பங்கீட்டங்கைகளுக்கும், எம்மால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்கும் மட்டும் வழங்கப்படும் என்பதை, கூட்டுத்தாபனத்துடன் பதிவுசெய்யப்பட்டுள்ள சகல அச்சடிப்பாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அச்சடிப்பாளர்கள் தமது முழுப் பங்கின் 1/3 வீதத்திற்கு மட்டும் பாங்ஸ் மற்றும் பொண்ட்ஸ் கொள்வனவு செய்ய உரித்துடையவர்களாவர். பங்கிற்கு கூடுதலான எந்த ஒரு தேவையையும், கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பாங்ஸ் மற்றும் பொண்ட்ஸ் 51 ஜி. எஸ். எம். (இறக்குமதி செய்யப்பட்டது) இம்மாதத்திற்குள் கப்பலில் எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட பாங்ஸ் மற்றும் பொண்ட்ஸ் 23 X 36/30 இரு. அளவின் விலைகள் பின்வருமாறு'

| | வெண்ணிறம் ரூபா | நிறம் ரூபா |
|---|---|---|
| மொத்த விலை | 58-50 | 64-50 |
| பேரளவு பாவனையாளர்விலை | 61-45 | 67-75 |
| உச்ச சில்லறை விலை | 67-30 | 74-20 |

பொதுமுகாமையாளர்.

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனம்

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.
21-5-71

2808


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

